**Previous Examination date – 09.03.2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 237 of 2020**

**Deposition of Witness P.W.**

| | |
|---|---|
| **Name : ராஜமுருகன்** | **Father/Husband's Name : ராஜா** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15.07.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.மூர்த்தி மற்றும் காவல் ஆய்வாளர் திரு.சையது பாபு ஆகியோர்களின் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.மூர்த்தி மற்றும் காவல் ஆய்வாளர் திரு.சையது பாபு அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திரு.மூர்த்தி அவர்கள் சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் கடந்த 23.02.2020ம் தேதி 19.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது குணசேகரன் மகன் அஜித்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து காவல்நிலைய சாமிநாதபுரம் காவல்நிலைய கு.எண்.46/2020 பிரிவுகள் 279, 304(A) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவயிடம் சென்று சாட்சிகள் பரமசிவம், கருப்புச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு பழனி அரசு மருத்துவமனை சவகிடங்குக்கு சென்று இறந்து போன குணசேகரன் என்பவர்

பிரேதத்தின் மீது 24.02.2020ம் தேதி காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இறப்பின் காரணம் அறிவதற்காக உடற்கூறாய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து இரண்டாம்நிலை காவலர் கார்த்திக்கேயன் என்பவர் மூலம் மேற்படி பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்ய அனுப்பி வைத்துள்ளார். பின்னர் காவல் நிலையம் வந்து ஆஜரான எதிரியை 26.02.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து உச்சநீதிமன்ற விதிமுறைகளை பின்பற்றி பாராவசம் ஒப்படைத்துள்ளார். பின்பு ஆய்வாளர் சையது பாபு அவர்கள் வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.03.2020ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 09 AP 3690 என்ற எண்ணுள்ள நான்குசக்கர வாகனம் மற்றும் KL 52 E 4342 என்ற நான்குசக்கரவாகனத்தையும் வாகன தணிக்கைக்காக வாகன தணிக்கை ஆய்வாளர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கின் இறந்துபோனவரின் பிரேதத்தை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் பாலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார். **குணசேகரன் என்பவரின் பிரேத கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஈஸ்வரன் ஆய்வு செய்து பின்பு வாக்குமூலம் பதிவு செய்து TN 09 AP 3690 என்ற எண்ணுள்ள நான்குசக்கர வாகனம் மற்றும் KL 52 E 4342 என்ற நான்குசக்கரவாகனத்தின் ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். **TN 09 AP 3690 என்ற எண்ணுள்ள நான்குசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. KL 52 E 4342 என்ற நான்குசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கில் பிரேத பரிசோதனைக்கு சென்ற காவலர் கார்த்திக்கேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.மூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279,304(A) இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தானது இறந்துபோனவரின் கவனகுறைவால் ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.**

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.15 17:32:55 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**